சிவமயம்



யாழ்ப்பாணம், பலாலி கிழக்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகவும்
அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# பொன்னுத்துரை சின்னத்தங்கம்

அவர்களின்

# தங்க மலர்



25.02.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம், பலாலி கிழக்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகவும்
அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் பொன்னுத்துரை சின்னத்தங்கம்

அவர்களின்

# நினைவு மலர்

**25-02-2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் பலாலி கிழக்கு வசாவிளானைப்
பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்
# பொன்னுத்துரை சின்னத்தங்கம்

அவர்களின்

# தங்க மலர்

25.02.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

மேன்மை கொள் சைவ நெறியிலே திளைத்திட்டு
உயர்குடிப் பண்பு துலங்கிடப் பேணிடும்
மரபிலே தோன்றி பொலிவுற கல்வியால்
உயர்ந்து அறிவால் சிறந்து வாழ்வாங்கு வாழ்ந்த
பொன்னுத்துரை சின்னத்தங்கம்
இறைவன் தாள் பற்றியமை குறித்த
நீங்கா நினைவுதனை எமது இதயக்
கமலத்திலே சுமந்து எமது உணர்வலைகளை
வெளிப்படுத்தி நிற்கிறோம்.
அன்னாரின் பொன்னடிகளில் இக்காதிதப்
பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த

# அமரர்

# பொன்னுத்துரை சின்னத்தங்கம் அவர்கள்

தோற்றம்:
14 . 05 . 1943



மறைவு:
26 . 01 . 2010

## திதி வெண்பா

ஆண்டு விரோதி அண்டிவரு தை மாதம்
பூண்ட பூர்வ பக்க ஏகாதசி – நீண்ட புகழ்
அம்மையார் சின்னத் தங்கம் அரனடி சார்ந்தார்
செம்மையாய் இவ்வுலகில் வாழ்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் வணக்கம்

திருவும் கல்வியும் சீரும் தளைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர்காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர் பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே.

## திருவாசகம்

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தரு வோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டிநீயாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டெனில்
அதுவும் உந்தன் விருப்பன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார்பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமை மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

ஐந்துபே ரறிவும் கண்களேகொள்ள
அளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றுந்
திருத்து சாத் துவிகமே யாக
இந்து வாழ் சடையா ணாடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட்டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகிழ் வழாது பெய்க! மலிவளம் சுரக்க!மன்னன்
கோன்முறை அரசு செய்க!குறைவிலா துயிர்கள்வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பொன்னுத்துரை சின்னத்தங்கம் அவர்களின் வாழ்க்கை வளம்

நீர்வளமும் நிலவளமும் நிலவியே விளங்குற்றுப்
பேராரும் ஆலயங்கள் புண்ணியங்கள் விளங்குபதி
ஏராரும் கைத்தொழில்கள் சனசமூகநிலையங்கள்
சீராக அமைந்திட்ட திருப்பதியாம் பலாலிப்பதி

பண்டிதரகள் பாவலர்கள் பயிர்செய்து பயன்பெறுவோர்
வண்மைமிகு விமானதளம் வளமான கலாசாலை
உண்மைமிகு கொடையாளர் உயர்முக் கனிமரங்கள்
திண்மைமிகு திருவூராம் திகழ் பலாலிப்பதி என்போம்

இராஜராஜேஸ்வரி அம்மனின் கருணையும்
இலங்கு விநாயகர் சிவனருள் தொன்மையும்
பூண்ட குடும்பநாயகன் இளையதம்பியாம்
பொன்னு நங்கையை வதுவை பூண்டனன்
நேர்ந்த விரதங்கள் செய்தவப் பயனதால்
சின்னத்தங்கம் என்றோர் அருமை மகளினை
பெற்றுக் களிப்புற்றனர் வாழ்வினில்
பெரும்பேறு எய்திய உவகைபூண்டனர்.

பலாலி சித்திவிநாயகர் பள்ளியில் தங்கமும்
சிறப்பொடு ஒன்பதாம் தரம்வரை கற்றனள்
ஆடியும் ஓடியும் குறும்புகள் செய்தனள்
ஆய மாமகள் ஆன தன்மையால்
ஏய மாமகன் யாரெனப் பெரியோர்கள
தேடித் தேடி கண்ணுற்று அலைந்தனர்.

செல்லையா பொன்னுவின் தவப்பயனான
பொன்னுத்துரை என்றொரு பெரந்திறல் மகனாய்
மன்னிய மாமன் மகனாய் வாய்த்தவன்
ஏற்ற மணாளன் எனப் பலர் கண்டனர்
புண்ணியத் தினமதில் வதுவை நிகழ்ந்தது
வந்தவர் வானவர் யாவரும் வாழ்த்தினர்
இல்லற வாழ்வில் இனிய நன்கலமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவர் பிள்ளைகள் வாய்த்தனர் மண்ணினில்
ஐங்கரன் பரணீகரன் கிரிசா மற்றும்
கிருபானந்தா யசீகரன் எனப் பெயர் பூண்டனர்.

பிள்ளைகள் யாவரும் ஒழுக்கம் பேணிட
தங்கமும் துரையும் ஆனவை செய்தனர்.
தர்மகாரியங்கள் தகவொடு புரிந்து
இறைவழிபாடு இயற்றி நின்றனர்.
கூரிய புத்தியும் சிரிய பண்பும்
தக்கோர் மதிக்கும் தகைமையும் கொண்டனர்.

லண்டன் நகரில் வாழ்ந்திடும் மகனாம்
ஐங்கரன் கொடிகாமம் கோயிலாமனையில்
திருநாவுக்கரசு வள்ளிப்பிள்ளை
செய்த தவப்பயனாய் வந்த மகளாம்
உமாரதியை திருமணம் செய்தனர்
வினூசன் துர்காயினி சிரோசா எனத் தவப்பிள்ளைகள்
பெற்றனர் பாரினில் மகிழ்வுற்றனர் அம்மா

இரண்டாவது மகன் பரணீதரன்
மூளாய் வாழ்பதி மகளாம் வவுனியா
செட்டிகுளத்தில் வாழ்பவர்
சிவஞானக் கண்மணி பெற்ற மாமகள்
லலிதா தேவியை வதுவை பூண்டனர்

மூத்தவள் கிரிசா பாசமகளென வாழ்பவள்
கொல்லன் கலட்டியூர் வேலுப்பிள்ளை
பரமேஸ்வரி மகளாம் தில்லை நாதனை
திருமணம் செய்தனள்
கபிஷனா என்ற செல்ல மகளைப் பெற்றுமே
வாழ்வினை ஓம்புவாள்.

கிருபானந்தி என்பாள் இரண்டாம் மகளாம்
கோப்பாய் பெற்ற மாமகன் இராசையா
மனைவி தங்கம்மா செய்தவப் பயனாய்
வந்தவன் வசந்தகுமார் என்ற குணக் குன்றன்
வதுவை நிகழ்ந்ததன் வசந்தமாய்
வந்தவன் விகாஷ் என்னும் அறிவடை நம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரகன் என்ற செல்லப் பெயருடையான்
யசீகரன் என்பான் கடைக்குட்டி தானாம்
சுவிஸ்பதி வாழ்ந்தே அன்னையை நினைப்பவன்
மகனாய் வந்தனன் மாதவம் செய்தனன்

சின்னத்தங்கம் ஏக புதல்வி என்றே
வாய்த்தனள் எனினும் எண்மர் சகோதரராயினர்
ஒன்று விட்டவர் என வந்தமைந்து
ஒன்று விடாமல் ஒன்பதாய் ஏற்றனர்.

இனிய நல்லறம் இயற்றினர் யாவரும்
சின்னத்தங்கம் வாழ்வில் திருப்பமாய்
குடும்பத்தாருடன் பல்லிடம் பெயர்ந்தனர்
நாட்டு நடப்பின் விளைவாய் பலாலி
திருவூர் விட்டு ஏகினர் மன்னே
அச்சவேலிப் பதியை அடைந்தே வாழ்வை
இயல்பட வாழ்ந்திடும் நாளினில்
பொல்லா நோயால் பொலிவிழந்தனளே
அன் பொட்புர அருளுடனீகை அருங் குணங்கள்
மன்னிடு தெய்வப் பணிகளில் மேவும்
மாமகள் சின்னத்தங்கம் விரோதியில்
தைமாதம் வருபதின் மூன்றாம் நாளில்
இறைபதம் நண்ணினள் இறை தொழுவோமே

# தேற்றம்

வினைப் போகமே ஒரு தேகம் கண்டாய் வினை ஒழித்தலை
தினைப் போதளவும் நில்லாது கண்டாய் சிவன்பாதம் நினை
நினைப்போரை மேவும் நினையாரை நீங்கி நெறியில் நின்றால்
உனைப்போல் ஒருவருண்டோ மனமே எனக்குற்றவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவன் புலம்பல்

அன்பின் நிறைந்த வொரு
அகத்தினாய் நின்றவளே
ஆருயிர் அன்னை என
ஆனபல செய்தவளே
இன்னல்கள் பல ஏற்று
ஐவரைப் பயந்தவளே
இன்முகங் கொண்டு நல்ல
பண்புகள் சொன்னவளே

பொன்னின் உருவே என்
புகழ் இல்லத் தாயவளே
பொல்லாக் கொடு நோயால்
போனாயே துடித்தேனே
கன்னல் மொழி அமுதே
கற்கண்டே செந்தேனே
பொன்னின் அம்பலவன்
புகழ் கழல்கள் நிற்பாயே

# மூத்த மகன் புலம்பல்

காற்றொடு வந்த சேதி கதறவைத்தம்மா
வேற்றூரில் நானிருந்தேன் வெந்து துடிதுடித்தேன்
ஊரெல்லாம் உறவென்று உண்டு ஓராயிரம் பேர்
உண்மையில் தாயண்பு உலகினில் ஈடாமோ?
பத்துமாதங்கள் சுமந்த என்தாயே தம்
என் பச்சிளம் பாலகர்கள்
பாட்டி முகம் கேட்கின்றார் யாது நானுரைப்பேன்
தாயில்லாமல் பாவியாய் பரிதவித்து நிற்கின்றேன்
பத்து வருடங்கள் காணாமல் துடிதுடித்தேன்
மாறாதம்மா உந்தன் முகம் ஆறாதம்மா எந்தன் மனம்
பணம் என்றால் பிணம் பேசும் என்ற முது மொழியும்
பொய்யாகிப் போனதம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் காக்க முயன்றிருந்தோம் உற்றவழி கிடைக்கவில்லை
பாரில் எம்மை மனிதராக்கிப் பாசத்தை நிதம் சொரிந்தாய்
மறக்க முடியவில்லை மனம் இன்னும்
நம்பவில்லை என்றும் இருப்பாய் நீ

## இரண்டாவது மகன் புலம்பல்

உலகில் உன்மகன் உயரவெண்டுமென்று
ஆசையினால் என்னைப் பெற்று உயர்த்தி விட்டவளே
இருபது வயதினிலே வெளிநாடு வந்தடைந்தேன்
தொலைபெசி பேச்சொன்றே உன் அன்ப மழலையாச்சு
நோயில் நீ படுத்த சேதியறிந்திட்டேன்
ஓடிவந்து உனைப்பார்த்து விழி
சொரிந்தேன் என் செய்வேன்
பேசவொண்ணா உன்நிலையை
பார்க்க மனம் பொறுக்கவில்லை.
எப்படிப் பொறுத்திடுவேன்?
என்தாயே நீ கூறு
தலைநகரில் வைத்தியங்கள்
பலசெய்தும் பலனில்லை
உலைக் களத்தில் இருப்பது போல்
இருக்கின்றேன் நானிங்கு
கொள்ளி வைத்துனக்கு
குடமுடைத்து அஞ்சலித்தேன்
அள்ளி அருள் சுரந்து ஆதரிப்பாய் என்தாயே!

## மூத்த மகள் புலம்பல்

ஈரைந்து மாதங்கள் சுமந்திருந்து பெற்றவளே
இரவு பகல் பாராமல் பால் ஊட்டி வளர்த்தவளே
பள்ளி சென்று நான்படிக்க பாசம் தந்தவளே
பண்பில் நாம் சிறக்க பல்லுதவி செய்தவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது வந்தவுடன் கைப்பிடித்துக் கொடுத்தவளே
அம்மா நீ அருகிருந்தால் ஆலமரநிழலம்மா
ஆர் கண்கள் பட்டதம்மா ஆறவில்லை அழுகையம்மா
எங்கம்மா சென்றுவிட்டாய் எத்திக்கும் நீயில்லை
காத்திருந்து கண்விழித்து காவல்பல நான் செய்தேன்
காலனவன் பிடியினிலே காரியங்கள் ஏதுமில்லை
வேளையென ஆறுகிறேன் வேண்டுமட்டும் அரற்றுகிறேன்
பூம்பொழியும் தாயே நின் பொன்னடிகள் வாழியவே!

## இரண்டாவது மகள் புலம்பல்

அம்மா என்றழைக்க அம்மா இனி இங்கில்லை
சும்மா வந்தெனக்குச் சுகம்தரவும் யாருமில்லை
தேம்பி அழுதுதழுது தேங்கியே நீர் வற்றிடவே
பாவி என்றோடி பரிதவித்துப் பதைபதைத்தேன்
என்பிள்ளை உன் முகத்தை
காணமனம் துடிக்கின்றான்
தாலட்டுப் பாடி ஒருக்கால் தூங்கவைக்க வாராயோ
என்னோடு நீ நின்ற நாட்கள் பொன் நாட்கள்
எப்பிறப்பில் இந்த இன்பம்
இனிநான் பெற்றிடுவேன்
அம்மா ஏம்மா? சொல்லாமல் போய்விட்டாய்.

## கடைசி மகன் புலம்பல்

அன்பான என் அம்மா ஆறவில்லை என் துயரம்
கடைக்குட்டி நானிங்கு கதறியே அழுகின்றேன்
நோய்வந்த நாள் முதலாய் நேர்ந்து பல விரதம் கொண்டேன்
தாய் உன்னை நான் பிரிந்தேன் தரணியே பிடிக்கவில்லை
வெளியில் நான் சென்றிட்டால் தெருவில் நீ நிற்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடு நீ அனுப்பிவைத்துப் பெரும் பேறாய் எனை வளர்த்தாய்
இன்னும் வாழ்ந்திருப்பாய் என்றே நம்பி நின்றேன்
கூடு விட்டு நீ போனாய் குருவிகள் நாம் கதறுகிறோம்.
பாசமுள்ள எம் அம்மா பரிதவித்து நாம் வந்தோம்
நேசங்கொண்டு மீண்டொருகால் இம்மண்ணில் வந்திடம்மா.

## மீண்டும் வாரீரோ

மாமி எம் உறவால்
பழகினேன் அன்று - ஆனால்
பதறுகின்றேன் இன்று
மாமியின் பிரிவால்

சின்னக் குழந்தையிலே
சிலகாலம் பிரிந்தேன் தாயை
சிறிதுமே தயக்கமின்றி - என்னை
சீராட்டி வளர்த்தீரே

நம்மையெல்லாம் - உம்
மக்கள் என எண்ணி
நல்லபடி நாம் வாழ
நல்லவர்கள் சொன்னீரே

தீராத நோயால்
படுத்த போதும்
தீரமாய் தேடினீர்கள்
பாசத்துடன் தம்மை

மாறாப் பிணியினால் சென்றீர்கள்
காலனிடம்
மீண்டும் வரமாட்டீர்களா
நம்மிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கித் தவிக்கின்றோம்
நாம் இங்கு
தொலைவில் சென்றாலும் வாழ்வீர்கள்
நம்மனதில்.

மருமகள்,
மெர்ஜிலி (மாங்கனி)

## மைத்துனிமார் புலம்பல்

உத்தமக் குணங்கள் கொண்ட
உயர் தவத்தண்பு மிக்க
மைத்துனி நீங்கள் மாண்ட
துயரறிந்துள்ளம் தேம்பி
மெத்த வேதனைகள் பட்டோம்
வெம்பினாம் வீழுகின்றொம்
எத்திசை சென்றீர் ஐயோ
வேகுதே நெஞ்சம் நெஞ்சம்

## மைத்துனர்மார் புலம்பல்

சத்திய வாழ்வு காத்தீர்
சரித்திர உயர்வு பெற்றீர்
நித்தமும் எங்கள் வாழ்வு
நிலைபெற உதவி நின்றீர்
தத்துவ சோதிக் கடவுள்
தனிப்பதம் ஏகிநீரும்
பத்திமை கொள்க பரமன்
பதமலர் அடைக சாந்தி

## மருமக்கள் புலம்பல்

பெற்றவருக்கு மாற்றென
நினைத்திருத்தோம் உம்மை
நற்செயலாய் நம் குடும்பம்
நனி காத்தீர் உன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றார்முன் உதவியொரு
உலகாண்டு நின்றீர்
பெற்றாயே எம்மாமி
புவனியில் அடைக சாஞ்சி

## சகோதர் புலம்பல்

கண்ணாகக் குடும்பத்தைக் காத்திருந்தாய்
பாசத்தின் தனிவடிவே பண்பின் ஊற்றே
பலதுன்பம் கண்டிற்றால் பதறிவந்து
நேசத்தோடு உதவுகின்ற சின்னத்தங்கம்
நினைக்கவில்லை நீயும் மறைவாய் என்று
நெஞ்சுருகிக் கதறியே நாம் புலம்புகின்றோம்
நிம்மதியே இல்லாது துடிதுடித்தோம்
நஞ்சகண்டன் கழலடைந்து சின்னத்தங்கம்
ஓம் சாந்தி பெற்றிடுக சாந்தி சாந்தி

## பொறாமகள் பிறேமா புலம்பல்

பெரியம்மா என்றழைத்த ஆசை மனம் ஓயவில்லை
தப்பாமல் நீர் தந்த அன்பினீரம் காயவில்லை
எப்போதும் கேட்கும் இனிய குரல் ஓயவில்லை
மறக்கவே எம்மனது ஆழமது தேயவில்லை
வஞ்சமில்லா உங்களது அன்பு வார்த்தை மறப்போமா?
ஓயாது அழைத்து நல்கும் பாசமழை மறப்போமா?
பெரியம்மா என்றழைத்தால் பெரும் பாசம் காட்டிடுவீர்
சொக்கா பலாகாரம் தேத்தண்ணீர் குடியுங்கள்
தங்கமழை பொழியும் தரணி நல் வார்த்தைதனை
தப்பாது நீர்உதிர்த்து எப்போதும் ஆசி தந்தீர்
தாய்போலப் பேரன்பு உம்மூலம் நாமறிந்தொம்
தங்கப்பெட்டியில் உன்னுடம்பைப் பார்க்கவில்லை
புனிதவுன் உடலுக்கு பூப்போட முடியவில்லை
விதிவழிதான் வாழ்க்கை என்ற உண்மைதனை நாமுணர்ந்து
விண்ணேக விரைந்ததென்ன வணங்கிடுவோம் எம்தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள் புலம்பல்

சித்தம்மா என்ற போது சிரித்து முகம் காட்டும் தாயே
புத்தமுதான வெள்ளப் புதுநகை பூக்கும் தாயே
நித்தமும் எங்கள் அன்பு நிலைக்காகவே உலகை ஆளும்
சத்தியக் கடவுள் பாதம் சரதமே அமைதி காண்க

## பேரப்பிள்ளைகள் புலம்பல்
## (கனடா, ஜேர்மனியில் உள்ளோர்)

வலம்புரியின் முத்தாக வந்துதித்த
வாழ்வளித்த எல்லோரும் வாழ்த்த நின்றாய்
தவம் பலவும் தொண்டு செய்து எங்களுக்காய்
தனியாக அர்ச்சனைகள் செய்துநின்றாய்
குலமகளே எம்பாட்டி சின்னத் தங்கம்
கொள்ளை கொண்டார் குணக்குன்றே
எமை அனைத்து ஆசி நல்கும்
எம்பெருமான் திருவடிகள் சேர்ந்திடுக.

## பேரப்பிள்ளை விகாஸ் புலம்பல்

உயிர் ஒன்று பிறப்பதுவும்
மானிடம் மதிப்பதுவும்
உலகத்தில் உள்ளதுதான்

மொட்டொன்று மலர்வதும்
பூ ஒன்று உதிர்வதும்
எல்லோரும் அறிந்ததுதான்

என்பெயர் உன் வாய்ப்பாடு
என் நினைவே உயிர்மூச்சு
பல்லோரும் புகன்றது தான்

தண்நிலவே என்நினைவே
தவிக்கவிட்டுச் சென்றாயே
வல்லோரும் அறிவாரோ சொல்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன் வினூஷன் புலம்பல்

மூத்த பேரன் என்றென்னை
முன்வைத்து வளர்த்தாயே
காத்த கடவுள் கண் மறைத்துச்
சென்றதென்ன பொன்தாயே
வாய்த்த இரு தங்கையரும்
வரங்கேட்டுத் தேடுகிறார்
என் சொல்லி ஆற்றிடுவேன்
எனக்கொருக்கால் சொல்லிவிடு
என் தந்தை துயர் கண்டேன்
என்மனமும் ஆறவில்லை
பொன் மனமே பூம்பொழிலே
பொன்னுலகு அடைந்திடம்மா.

## பேர்த்தி கபிஷனா புலம்பல்

அம்மம்மா என்றழைக்க
ஆருயிரே நீயில்லை
என் அம்மா அழும் ஓசை
என் மனதில் தாங்கவில்லை
ஆடுவதும், பாடுவதும் என்னோடு
கூடி விளையாடுவதும்
கோயிலுக்கு போவதும்
கடைத்தெருவை நாடுவதும்
பள்ளி செல்ல பாதிவழி
கூடுவதும் தேடி என்னை
வந்து அன்பு நாடுவதும் என்று
உந்தன் வாழ்வதனைக் கண்ணுற்றேன்
இந்தனை அன்பு காட்ட
இங்கு இனியாருமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளை துர்க்காயினி புலம்பல்

எந்தன் முகம் பார்க்காமல்
விண்ணேக மனமாச்சோ
எந்தன் மொழி கேட்காமல்
பூலோகம் நீ தந்தாயோ
பந்தம் என்றும் பாசமென்றும்
பரிதவிக்க விட்டு விட்டு
சொந்தம் இங்கு கதறநீங்கள்
சொல்லாமல் போனதென்ன?

## மருமகள் பிரதா புலம்பல்

மாமி என்று ஓடிவருவேனே இனி யாரிடம் தான் ஓடுவது.
மாமி ஏன் எம்மை தனியாக விட்டு பிரிந்துவிட்டீர்கள்.
மாமி என்றழைக்க நீங்களும் தான் இங்கில்லை
நாம் இனி எப்பதான் எனி உங்களை கூப்பிடுவது
மாமி உங்களுக்கு எப்படி மனசு வந்தது எங்களை விட்டு பிரிவதற்கு
மாமி உங்களை இடைநடுவிலே காலனவன்
வருத்தத்தை தந்து பறித்து விட்டான்.
மாமி உன் நினைவால் என்றும் தவிக்கின்றேன்
மாமி நீங்கள் எம்மைவிட்டு மண்ணுலகம் சென்று விட்டீர்கள் உங்களை நாம் எப்படிக் காண்பது நிஜத்தில் காண்பதா, கனவில் காண்பதா உங்களை.
மாமி இன்னொரு பிறப்பிருந்தால் மீண்டும் எங்களுடன் மறுபிறப்பில்பிறப்பீர்களா?

## மருமக்கள் புலம்பல்

அக்கா அக்கா என்று ஓடிவருவாரே தம்பி தம்பியை தவிக்கவிட்டு வெகுதூரம் சென்று விட்டாயே அக்கா தம்பியின் பிள்ளைகளை தவிக்க விட்டு நீ மட்டும் சென்று விட்டாய். மாமி மாமி என்று அடிக்கடி உன்னிடம் ஓடி வருவோமே நீ வருத்தமாய் கிடந்த போதும் உன் தம்பி மனைவி பிள்ளைகள் எல்லோரும் உன்னைக் காண ஓடிவருவோமே எம்மையெல்லாம் விட்டு நீ விண்ணுலகம் சென்று விட்டாயே உன்னை ஏன் காலனவன் இடைநடுவில் பறித்து விட்டான். நீ 65வயதினிலே உன் உயிரை நீத்து விட்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் தம்பியின் பிள்ளைகள் உன்னுடன் எப்படி பாசமாய் இருந்தார்கள். எல்லோரையும் தனியாக தவிக்க விட்டு சென்றுவிட்டீர்களே. அக்கா உன் நினைவுகளுடன் நாம் எல்லோரும் தவிக்கின்றோம்.

மாமி என்று நாம் அழைக்கும் போது மனம்மகிழ்ந்து அணைத்தீர்கள். உங்கள் பிள்ளைகள் போல் எங்களையும் அரவனைத்தீர். இன்று மட்டும் ஏன் எங்களை அழவிட்டுச் சென்றீர்கள்?

## அண்ணன் குடும்பத்தினர் புலம்பல் [சின்னையா]

பிள்ளை பிள்ளை என்று நான் அழைத்த போதெல்லாம் அன்னையாய், தந்தையாய் அன்புச் சோதியாய் எனக்கு ஆறுதல் தந்த தங்கையே! இத் தரணியில் நீ வாழ்ந்த காலத்தை யான் எப்படியம்மா மறப்பது உன் அண்ணன் குடும்பம் யுத்தப் பிரதேசத்தில் சிக்குண்டு நின்றபோது நீ இங்கு பதறித் துடித்தாயம்மா. அன்று நாம் சிதறலின்றி வந்தபோதும் தாங்குமா என்மனம் ஏங்குதம்மா உன்நினைவில்.

மச்சாள் நீங்கள் தனிப்பிள்ளை ஆனாலும் ஆயிரம் உறவுகளை அணைத்து ஆதரவு கொடுத்தீர்கள் அன்று நீங்கள் அணைத்த உறவுகள் நாமின்றி உன்முகம் காணத் துடிக்கின்றோம். மச்சாள் மச்சாள் என நீங்கள் நோயுற்றுப் படுத்திருந்த வேளைகளில் உங்கள் பிள்ளைகளுடன் இணைந்து இரவிரவாய் கண்விழித்துக் காத்திருந்தேன். உம் சாவதனைத் தடுக்கமுடியாமல் நம்மக்கட் பேறுபெற்று மாநிலம் போற்றப் புகழுடன் வாழ்த்த உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக் கின்றோன்.

**உங்கள் நினைவுடன்**

**அண்ணன், அண்ணி, மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறாமகள் சோபிதாவின் புலம்பல்

பாசவினை களைந்து
        பார்விட்டு சென்றதாலே
நேச இதயங்கள் அழும்
        ஓசை கேட்கலையோ
நேச மதந் கடந்து
        தொல்லுலகு சென்றீரோ
ஈசன் அருள் பெற்று
இன்ப உலகு வாழ்ந்திடுக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குசபாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக்குஅருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக்கு அருளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசியப்ப முனிவர் அருளிய
# விநாயகர் கவசம்

**(தமிழில் கச்சியப்ப சுவாமிகள் அருளியது.)**



வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்கவாய்த்த சென்னி
அளவுபடா வதிகசவுந் தரதேகம்
மகோற்கடர் தாம் அமர்ந்து காக்க
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய
காசிபர் காக்க புருவந் தம்மைத்
தளர்வின் மகோ தரர்காக்க
தடவிழிகள் பாலச்சந்திரனார் காக்க

கவின் வளரும் அதரங்கச முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சி புகம் கிரிசைசு தர்காக்க
நனிவாக்கை விநாயகர் தாங் காக்க
அவிர்நகை துன்முகர் காக்க அள்ளெழிற்
செஞ்செவி பாச பாணி காக்க
தவிர் தலுறாதிளங் கொடிபோல் வளர்மணி
நாசியைத் சிந்திதார்த்தர் காக்க

காமருபூ முகந்தன்னைக் குணேசர் நனிகாக்க
களம் கணேசர் காக்க
வாமமுறுமிரு தோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின விநாசன்
காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கண நாதர் காக்க
அகட்டினைத் துலங்கே ரம்பர் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்க மிரண் டையுந் தராதரர் காக்கப்
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினகரன் காக்க விளங்கி லிங்கம்
வியாள பூடணர்தாங் காக்க
தக்க குய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க சகனத்தையல்லல்
உக்க கணபன் காக்க ஊருவை
மங்கள மூர்த்தி யுவந்து காக்க

தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்க
இருபதமேக தந்தர் காக்க
வாழ் கரங்கிப் பிரப்பிரசாதனர் காக்க
முன்கையை வணங்குவார்நோய்
ஆழ்தரச் செய்யா சாபூரகர் காக்க
விரல்பதும வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க

அக்கினியிற் சித்தீசர் காக்க
உமாபுத்திரர் தென்சிகை காக்க
மிக்க நிருதியிற் கணேசுரர் காக்க
விக்கினவர்த் தனர் மேற்கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்
கசகன்னன் காக்க திகழ் உதீசி
தக்கநிதிபன் காக்க
வடகிழக்கி லீசாந் தனரே காக்க

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்க
விரவினுஞ் சந்தியிரண் டன் மாட்டும்
ஒகையின் விக்கின கிருது காக்க
இராக்கதர்பூத முறுவே தாள
மோகினி பேயிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவிலாத வேக முறு
பிணிபலவும் விலக்கு புபாசாங்குசர்
தாம் விரைந்து காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிஞானம் தவம்தான மானமொளி
புகழ் குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனம்தானி யங்கிரகம்
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்து சர்வாயுதர் காக்க
காமா பவுத்திரர் முன்னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க

வென்றி சீவி தங்கபிலர் காக்க
கரியாதி யெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனை முக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதினாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேகமாகி மன்னும்.

**விநாயகர் கவசம் முற்றிற்று.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்க சுவாமிகள் அருளிய
## சிவபுராணம்



## திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா னெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க
வேகங் கெடுத் தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள் மகிழும் கோன்கழல் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல்கள் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குச்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்க ரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதேஎன் தோழி பரிசேலோர் எம்பாவாய். 01

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போதெப்போ திப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய் 02

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம்புன்மை தீர்த்தாட் கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.03

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 04

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவறியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 05

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவறியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய் 06

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்ன தந்சேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய்இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடைத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங் கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். 08

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார்தாள் பணிவோம்ஆங்கவர்க்கேபாங்காவோம்
அன்னவரே எங்கண வராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையேயெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலா மேலோர் எம்பாவாய். 09

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவி துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையால் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தெம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இல்லாததோர் இன்பம்நம் பாலதாக
கொங்குண் கருங்குழலி நந்தெம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடிநலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாலப்போல
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 18


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
　　அங்குஅப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
　　எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
　　கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
　　எங்கெழிலென் ஞாயிறெமக் கேலோர் எம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
　　போற்றி அருளுகனின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
　　போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
　　போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
　　போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய். 20

முற்றும்

## திருப்பொற்சுண்ணம்

முத்துநற் றாமம்பூ மாலைதூக்கி
　　முளைக்குடந் தூபநற் றீபம்வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
　　நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்பதியுங்
　　கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
　　யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண் டர் புறம்நிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொ ன்சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நா தநல் வேலன் தாதை
எந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்துநாமே. 3

காசணிமின்க ளுலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 4

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக்கை பலவோச்சு வார்பெரிய
ருலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்துநின்றார்
காண வுலகங்கங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண் மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ண மிடித்துநாமே. 6

சூடகத் தோள்வளை யார்ப்ப வார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமு மவர்தம்மை யார்ப்பவார்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப் பொற்சுண்ண மிடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோற்றெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
யாடப் பொற்சுண்ண மிடித்துநாமே. 8

வையகமெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கை நாட்டி
மெய்யெனு மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொ னுலக்கை வலக்கைபற்றி
ஐய னணிதில்லை வாண னுக்கே
பாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைக களாடவாட
மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கையற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானோடு மாடவாட
பிறவி பிறரொடு மாடவாட
அத்தன் கருணையொ டாடவாட
ஆடப் பொற்சுண்ண மிடித்துநாமே. 10

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமி னம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை வையர்பி ரானைநம்பி
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையனெம் மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் றெளிவைப்பகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவக னாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய் சுண்ண மிடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்க னெயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
இயைந்தன முப்புர மெய்தல்பாடி
யேழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாகணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடு மரவம்பாடி
யீசற்குச் சுண்ண மிடித்துநாமே. 19

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்கு
பந்தமுமாய் வீடம் ஆயினார்க்கு
ஆதியு மந்தமு மாயினாருக்
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரகுருபரர் அருளிய

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொ
லோசக மேழுமளித்து
உண்டானுறங்க வொழித்தான் பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே. 01

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடி யே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்குங் கரும்பே
சகல கலா வல்லியே. 02

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலா வல்லியே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் துறை தோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலா வல்லியே. 04

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட் கமலத்
அஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலா வல்லியே. 05

பண்ணும் பரதமும் கல்வியு
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகல கலா வல்லியே. 06

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும்படி நின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே. 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமுு மவதான
முங் கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ் சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலா வல்லியே. 08

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடி யோ
டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலா வல்லியே. 09

மண் கண்ட வெண் குடை கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண் கண் டளவிற் பணியச் செய்
வாய் படைப் போன் முதலாம்
விண் கண்ட தெய்வம் பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன் போற்
கண் கண்ட தெய்வ முளதோ
சகல கலா வல்லியே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிக்காப்பு



## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்றமொடு பொருட் குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வராமற்கா

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீநோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதத்தைக் கண்டு விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே!
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றி விட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்துவிடும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவிடும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண் திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்



*காப்பு*

நேரிசை வெண்பா
குகமயம்

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

– குறள் வெண்பா –

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச்சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலன் சீக்கிரம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வா
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர் வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறியை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண் வேல்காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப்பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ் சனமும் ஒரு வழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துக் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நாஇருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலங்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்தநாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட் சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குரபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்!.

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் அநுபூதி



### காப்பு

நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்து உருகத்
தஞ்சத்து அருள் ஷண்முகனுக்கு இயல்சேர்
செஞ்சொல் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனைபதம் பணிவாம்.

ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணிய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானைச் சகோதரனே. 1

உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனும் நீயலையோ?
எல்லாம் அற என்னை இழந்த நலம்
சொல்லாய் முருகா! சுர பூபதியே. 2

வானோ புனல்பார் கனல் மாருதமோ
ஞானோதயமோ நவில் நான்மறையோ
யானோ மனமோ எனை ஆண்ட இடம்தானோ
பொருளாவது ஷண்முகனே. 3

வளைபட்ட கைம்மா தொடுமக்கள் எனும்
தளைபட்டு அழியத் தகுமோ? தகுமோ?
கிளைபட்டு எழுசூர் உரமும் கிரியும்
தொளைபட்டு உருவத்தொடு வேலவனே. 4

மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறும் ஒழிந்தும் ஒழிந்திலனே
அகமாடை மடந்தையர் என்று அயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணியான மனோசிலை மீதுஉனதாள்
அணியார் அரவிந்தம் அரும்பும் அதோ?
பணியா என வள்ளி பதம்பணியும்
தணியா அதிமோக தயாபரனே. 6

கெடுவாய் மனனே! கதிகேள் கரவாது
இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே்
விடுவாய் விடுவாய் வினையாவையுமே. 7

அமரும் பதிகேள் அகமாம் எனும்இப்
பிமரம்கெட மெய்ப்பொருள் பேசியவா!
குமரன்! கிரிராசகுமாரி மகன்
சமரம் பொரு தானவ நாசகனே. 8

மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டுசல் படும் படர் என்று ஒழிவேன்
தட்டூடு அற வேல்சயிலத் தெறியும்
நிட்டூர! நிராகுல! நிர்ப்பயனே. 9

கார்மா மிசை காலன் வரின் கலபத்
தேர்மாமிசை வந்து எதிரப் படுவாய்
தார்மார்ப! வலார் இதலாரி எனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே. 10

கூகா என என்கிளை கூடி அழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசியவா!
நாகாசல! வேலவ! நாலுகவித்
தியாகா! சுரலோக சிகாமணியே. 11

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல்அற என்றலுமே
அம்மாபொருள் ஒன்றும் அறிந்திலனே. 12

முருகன் தனிவேல் முனி நம் குரு என்று
அருள் கொண்டு அறியார் அறியும் தரமோ?
உருவன்று அருவன்று உளதன்று இலதன்று
இருளன்று ஒளியன்று என நின்றதுவே. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய் மனனே! ஒழிவாய் ஒழிவாய்
மெய் வாய் விழி நாசியொடும் செவியாம்
ஐவாய் வழிசெல்லும் அவாவினையே. 14

முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் செயல்தந்து உணர்வென்று அருள்வாய்
பொருபும் கவரும் புவியும் பரவும்
குரு புங்கவ! எண் குண பஞ்சரனே. 15

பேராசை எனும் பிணியில் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ?
வீரா! முதுசூர் படவேல் எறியும்
சூரா! சுரலோக துரந்தரனே. 16

யாம் ஓதிய கல்வியும் எம்அறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல்போய் அறம் மெய்ப்புணர்வீர்!
நாமேல் நடவீர் நடவீர் இனியே. 17

உதியா மரியா உணரா மறவா
விதிமால் அறியா விமலன் புதல்வா!
அதிகா! அனகா! அபயா! அமரா
வதிகாவல! சூர பயங்கரனே. 18

வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடி போகியவா
அடியந்தமிலா அயில்வேல் அரசே!
மிடியென்று ஒருபாவி வெளிப்படினே. 19

அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா
விரிதாரண! விக்ரம! வேள்! இமையோர்
புரிதாரக! நாக புரந்தரனே. 20

கருதா மறவா நெறிகாண எனக்கு
இருதாள் வனசந்தர என்று இசைவாய்
வரதா! முருகா! மயில்வாகனனே!
விரதா! சுரசூர! விபாடணனே 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளைக் குமரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம் எய்தியவர்
பாளைக் குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச் சுரபூபதி மேருவையே. 22

அடியைக் குறியாது அறியாமையினால்
முடியக் கெடவோ? முறையோ முறையோ?
வடிவிக்ரம வேல்மகிபா! குறமின்
கொடியைப் புணரும் குண பூதரனே. 23

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன் அருள் சேரவும் எண்ணுமதோ?
சூர்வேரொடு குன்று தொளைத்த நெடும்
போர்வேல! புரந்தர பூபதியே. 24

மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து
ஐயோ! அடியேன் அலையத் தகுமா?
கையோ அயிலோ கழலோ முழுதும்
செய்யோய்! மயிலேறிய சேவகனே! 25

ஆதாரம் இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒருசற்றும் நினைந்திலையே
வேதாகம! ஞான வினோத! மனோ
தீதா! சுரலோக சிகாமணியே 26

மின்னே நிகர்வாழ்வை விரும்பி யான்
என்னே விதியின் பயன் இங்கு இதுவோ?
பொன்னே! மணியே! பொருளே! அருளே!
மன்னே! மயிலேறிய வானவனே. 27

ஆனா அமுதே! அயில்வேல் அரசே!
ஞானாகரனே! நவிலத் தகுமா?
யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே. 28

இல்லேயெனும் மாயையில் இட்டானை நீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையோ
மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையும் சுடர் வேலவனே. 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வான் உருவில் திகழ் வேலவன் அன்று
ஒவ்வாததது என உணர்வித்ததுதான்
அவ்வாறு அறிவார் அறிகின்றதலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே. 30

பாழ்வாழ்வு எனும் இப்படு மாயையிலே
வீழ்வாய் என என்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தன தாம் உளவோ?
வாழ்வாய் இனி நீ மயில் வாகனனே. 31

கலையே பதறிக் கதறித் தலையூடு
அலையே படுமாறு அதுவாய் விடவோ?
கொலையே புரி வேடர்குலப் பிடி தோய்
மலையே! மலை கூறிடு வாகையனே. 32

சிந்தாகுல இல்லொடு செல்வம் எனும்
விந்தாடவி என்று விடப் பெறுவேன்
மந்தாகினி தந்த வரோதயனே!
கந்தா! முருகா! கருணாகரனே! 33

சிங்கார மடந்தையர் தீநெறிபோய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்
சங்க்ராம சிகாவல! ஷண்முகனே!
கங்காநதி பால! க்ருபாகரனே. 34

விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழல் என்று அருள்வாய்
மதிவாள் நுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா! சுரபூபதியே. 35

நாதா! குமரா! நம என்று அரனார்
ஓதாய் என ஓதியது எப்பொருள்தான்?
வேதா முதல் விண்ணவர் சூடு மலர்ப்
பாதா! குறமின் பதசேகரனே. 36

கிரிவாய் விடுவிக்ரம வேல் இறையோன்
பரிவாரம் எனும் பதம் மேவலையே
புரிவாய் மனனே! பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே. 37


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாளியை ஒன்று அறியேனை அறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ?
கூதாள கிராதகுலிக்கு இறைவா!
வேதாளகணம் புகழ் வேலவனே. 38

மாவேழ் சனனம் கெட மாயை விடா
மூவேடணை என்று முடிந்திடுமோ?
கோவே! குற மின்கொடி தோள் புணரும்
தேவே! சிவசங்கர தேசிகனே. 39

வினையோட விடும் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ?
சுனையோடு அருவித் துறையோடு பசுந்
தினையோடு இதனோடு திரிந்தவனே. 40

சாகாது எனையே சரணங்களிலே
காகர் நமனார் கலகம் செயுநாள்
வாகா! முருகா! மயில்வாகனனே!
யோகா! சிவஞானோபதேசிகனே. 41

குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற்று உலகோடு உரைசிந்தையு அற்று
அறிவற்று அறியாமையும் அற்றதுவே. 42

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா! முருகா நினது அன்பு அருளால்
ஆசா நிகளம் துகள் ஆயினபின்
பேசா அனுபூதி பிறந்ததுவே. 43

சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லுமதோ?
வீடும் சுரர்மாமுடி வேதமும் வெங்
காடும் புனமும் கமழும் கழலே. 44

கரவாகிய கல்வி உளார் கடைசென்று
இரவா வகை மெய்ப்பொருள் ஈகுவையோ?
குரவா! குமரா! குலிசாயுத குஞ்
சரவா! சிவயோக! தயாபரனே 45


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்
கந்தா! கதிர்வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நாயகனே. 46

ஆறாறையும் நீத்து அதன்மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமாறு உளதோ?
சீறா வருசூர் சிதைவித்து இமையோர்
கூறா உலகம் குளிர்வித்தவனே. 47

அறிவொன்று அற நின்று அறிவார் அறிவில்
பிறிவொன்று அறநின்ற பிரானலையோ?
செறிவொன்று அறவந்து இருளே சிதைய
வெறிவென்று அவரோடு உறும் வேலவனே. 48

தன்னம் தனிநின்று அதுதான் அறிய
இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ?
மின்னும் கதிர்வேல் விகிர்தா! நினைவார்
கின்னம் களையும் கிருபை சூழ் சுடரே. 49

மதிகெட்டு அறவாடி மயங்கி அறக்
கதிகெட்டு அவமே கெடவோ கடவேன்?
நதிபுத்திர! ஞானசுகாதிப! அத்
திதிபுத்திரர் வீறடு சேவகனே. 50

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதிராய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே. 51



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சிறப்புச் செய்திகள்

01) இலங்கையின் பழைய பெயர்கள் எவை?
தப்பரபேன், ஈழம், (இலங்காபுரி

02) இலங்கையின் வடபிரதேசம் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பெற்றிருந்த பெயர் என்ன?
நாகதீவு

03) இலங்கையின் முதல் அரசன் யார்?
இராவணேஸ்வரன்

04) இலங்கையின் வரலாற்றைக் கூறும் சிங்கள நூல்கள் எவை?
மகாவம்சம், தீபவம்சம், சூலவம்சம்.

05) இலங்கையின் ஆதிக்குடிகள் எவை?
இயக்கர், நாகர் என்ற திராவிட பரம்பரையினர்.

06) அந்நியர் வருகைக்கு முன்னர் இலங்கை எத்தனை பிரிவுகளாக இருந்தன?
இராசரட்டை, மாயரட்டை, உறுகுணரட்டை

07) சிங்கள மொழியின் தோற்றக்காலம் எது?
சுமார் 1000 வருடங்கள்

08) சிங்கள மொழியில் பரவலாகக் காணப்படும் மொழிச்சொற்கள் எவை?
தமிழ், பாளி, சமஸ்கிருதம்

09) "ஆற்றிடைக்குறை" என்பது எது?
இலங்கை ஆகும்.

10) இலங்கைப்படத்தை முதலில் வரைந்தவர் யார்?
தொலமி கி.பி. 2ம் நூற்றாண்டு

11) தொலமியின் இலங்கைப் படத்தில் வடபகுதியின் பெயர் என்ன?
நாகதீவு

12) இலங்கையின் வரலாற்றுத் தொடர்பான நூல் எழுதியவர் யார்?
றோபேட் நொக்ஸ்

13) இலங்கை எப்போது குடியேற்ற நாடாக்கப்பட்டது?
1802 இல்

14) இலங்கை முழுவதும் பிரித்தானிய ஆதிக்கத்தின் கீழ் வந்த காலம் எப்போது?
1815 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) கண்டி இராச்சியம் வீழ்ச்சியடைந்த காலம் எப்போது?
1815 இல்

16) வன்னித் தமிழ் இராச்சியம் வீழ்ச்சியடைந்த காலம் எப்போது?
1803 இல்

17) இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
1919 இல்

18) தேசிய காங்கிரசை நிறுவியவர் யார்?
சேர். பொன் அருணாசலம்

19) டொனமூர் அரசியல் திட்டம் வந்த காலம் எப்போது?
1931 இல்

20) சோல்பரி அரசியல் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது எப்போது?
1947 இல்

21) 21 வயதினர்க்கு வாக்குரிமை வழங்கப்பட்டது எப்போது?
1931 இல்

22) பாராளுமன்ற ஆணையாளரைக் குறிக்கும் சொல் எது?
ஓம்புட்ஸ்மன் (தனி ஆணையாளர்)

23) இலங்கையின் ஆரம்பகால அரசியல் வாதிகள் யார்?
சேர். பொன் இராமநாதன், சேர். பொன் அருணாசலம், எப் ஆர். சேனநாயக்கா, டி. எஸ். சேனநாயக்கா.

24) இலங்கையின் தற்போதைய நிர்வாக மாவட்டங்கள் எத்தனை?
25.

25) இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்கள் எவை?
பிரதேசசபை, நகரசபை, மாநகரசபை.

26) பிரதேச, மாகாணசபை தோற்றுவிக்கப்பட்ட காலம் எது?
1987இல்

27) இலங்கையில் சுதந்திர அரசியல் சட்டம் ஆக்கப்பட்ட ஆண்டு எது?
1948 இல்

28) சுதந்திர அரசியல் சட்டத்தில் தமிழர்களுக்கு பாதுகாப்பாக இருப்பது எது?
29 வது விதி

29) இலங்கையில் முதல் குடியரசு அரசியல் சட்டம் ஆக்கப்பட்ட காலம் எது?
1972

30) இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஏற்பட்ட காலம் எது?
1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31) சிங்களம் மட்டும் சட்டமாகக்கப்பட்ட ஆண்டு எது?
1956

32) மலையகத் தமிழர்களின் குடியுரிமை பிரசாவுரிமை நீக்கப்பட்ட காலம் எது?
1949 இல்

33) சொத்துரிமை தொடர்பான டச்சுக்காரர் புகுத்திய சட்டத்தின் பெயர் என்ன?
தேசவழமை

34) சுதந்திர இலங்கையின் முதல் தேசாதிபதி யார்?
சோல்பரிப்பிரபு

35) இலங்கைக் குடியரசில் முதல் சேதசாதிபதி யார்?
சேர். ஹென்றி மொங்மேசன்மூர்

36) இலங்கையின் முதல் அரசியல் சட்டம் யாரால் எழுதப்பட்டது?
சேர். ஐவர் ஜெனிங்ஸ்

37) கற்சிலைமடுப் போருடன் தொடர்புடைய அரசன் யார்?
பண்டாரவன்னியன்

38) இலங்கையின் முதலாவது பிரதமமந்திரி யார்?
திரு. டி. எஸ். செனநாயக்கா

39) 19ம் நூற்றாண்டில் பௌத்தமத மறுமலர்ச்சிக்கு பாடுபட்டவர் யார்?
அநாகரிக தர்மபால

40) கண்டியரசனை வெள்ளைக்காரருக்குக் காட்டிக்கொடுத்தவர் யார்?
ஏகலப்பொல

41) சேர் பட்டம் பெற்ற முதல் இலங்கையர் யார்?
ஆனந்தகுமாரசாமி

42) இலங்கையில் சிங்கள இஸ்ஸாமியர் இனக்கலவரம் நடந்த காலம் எப்போது?
1914,

43) இலங்கையில் தமிழருக்கெதிரான இனக்கலவரங்கள் நடந்த காலம் எது?
1956, 1958, 1977, 1983

44) சிங்களமொழி நாளேடுகளின் பெயர்கள்?
சிலுமின, லங்காதீப, தவச

45) இலங்கையில் சிங்களமொழி நடுநிலைமை இதழ்
ராவய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வளம்

46) சேனைப் பயிர்ச்செய்கை நடைபெறும் இடங்கள் எவை?
வடமத்திய, வடமேற்கு, வடகிழக்கு, மாகாணங்கள்

47) இலங்கையின் மண் ஆராய்ச்சி விஞ்ஞானி யார்?
அமரர் டாக்டர் பொன்னம் பெருமா

48) ஜீவன கங்கை எனப்படுவது யாது?
மகாவலிகங்கை

49) மகாவலி H வலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட பயிர்ச்செய்கை எது?
பருத்தி

## போக்குவரத்து

50) போக்குவரத்துச் சேவை தேசிய மயமாக்கப்பட்ட காலம் எது?
1958 இல்

51) போக்குவரத்துச் சேவை மக்கள் மயமாக்கப்பட்டது எப்போது?
1993ம் ஆண்டில்

## பொருளாதாரம்

52) இலங்கைப் பொருளாதாரக்துக்கு ஆதாரமாக இருப்பவை எவை?
தேயிலை, ரப்பர், தெங்குப் பொருட்கள்

53) பண்டைக்காலம் தொட்டு இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிப்பது எது?
இரத்தினக் கற்கள்

54) இலங்கையில் எந்தவகைப் பொருளாதாரக் கொள்கை உண்டு?
கலப்புப் பொருளாதாரம்

## திட்டங்கள் – விபரம்

55) நீர்ப்பாசனத்திட்டம் எங்கே இருக்கிறது?
கல்லோயா, உடவளவை, மகாவலி, மாதுறுஓயா

56) சுதந்திர வர்த்தக வலயம் எங்கே இருக்கிறது?
பியகம, கட்டுநாயக்கா

57) இலங்கையின் நீர்மின்சாரத்திட்டங்கள் உள்ள இடங்கள் யாவை?

மஸ்கெலியா, லக்சபானா, இங்கினியாகல விக்டோறியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இடங்கள்

58) தலதாமாளிகை - கண்டி
59) ரூவான் வெலிச - அனுராதபுரம்
60) வெந்நீரூற்றுக்கள் - கன்னியா (திருகோணமலை)
61) குகை ஓவியங்கள் - சிகிரியா டம்புள்ளை

## புராதன நூல்கள் – இலங்கை

62) அரக்கப்பிரகாசம் - எழுதியவர் இராவணன்
63) மகாவம்சம் - எழுதியவர் மகாநாமா
64) சிங்கள நாகரிகம் வீழ்ச்சியடைந்த காரணம் யாவை?
கலிங்க மரகனின் கொடுங்கோல், மலேரியா நோய்.
உலர்வலயம் காடுகளாக மாறியமை
65) சிங்கள மொழிப் பஞ்சாங்கத்தின் பெயர்?
இரணம்
66) தமிழ் பஞ்சாங்கத்தின் பெயர்
1. வாக்கியம்
2. திருக்கணிதம்
67) இலங்கையில் மூலக்காடுகள் உள்ள இடம் எது?
சிங்கராஜவனம்
68) இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் காடுகள்
20 வீதம்
69) இலங்கையின் முதல் தாது கோபுரத்தின் பெயர்
தூபராமா
70) சேனநாயக்கா சமுத்திரம் அமைந்துள்ள இடம்
அம்பாறை (இக்னியாலே)
71) சைவசமய மறுமலர்ச்சியின் தந்தை யார்?
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
72) இலங்கைக்கு புத்தமதத்தை பரப்ப வந்தோர் யார்?
சங்கமித்தை, மகிந்தன்
73) விஜயனும் அவனுடைய தோழர்களும் இலங்கையில் வந்தடைந்த இடம் எது?
தம்பதேனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74) புகழ் பெற்ற வெள்ளரசு மரத்தைக் கொண்டு வந்தவர் யார்?
சங்கமித்தை

75) மனிதனும் குதிரையும் காணப்படும் கற்பாறை அமைந்துள்ள இடம் ?
இசுறுமுனியா அனுராதபுரம்

76) தொகுதி அடிப்படைத் தேர்தல் முறையின் போது 1978ம் ஆண்டில் இலங்கையில் எத்தனை பாராளுமன்றத் தொகுதிகள் இருந்தன?
169 தொகுதிகள்

77) அரசகேசரி என்ற யாழ்ப்பாண வம்ச அமைச்சர் பாடிய நூல் எது?
இரகு வம்சம்

78) இலங்கையில் இலக்கியத்துக்காக வழங்கப்படும் அதியுயர் விருது?
சாகித்திய ரத்னா

79) இலங்கையின் முதல் தமிழ்ப் புலவர்?
ஈழத்துப் பூதந்தேவனார்

80) இலங்கையின் தேசிய மலர் எது?
நீலஅல்லி அல்லது ஆம்பல்
நிம்பியா ஸ்ரெலாட்டா (*Nymphaea Stellata*)

81) இலங்கையின் தேசிய மரம் எது?
நாகமரம் (*Mesua Nagasarium*)

82) சமுர்த்தித் திட்டம் என்றால் என்ன?
சமுர்த்தி என்பது வெறுமனே ஒரு வறுமை ஒழிப்புத்திட்டமல்ல ஒரு பொருளாதார முன்னேற்றத் திட்டமும் ஆகும்.

83) இலங்கையின் உயர்ந்த மலைச்சிகரம் எது?
பீதுருதாலகால மலை 2685 m

84) இலங்கையின் பரப்பு யாது?
65610 $km^2$

85) இலங்கையின் மிக நீளமான நதி யாது?
மகாவலி கங்கை 333 km

86) இலங்கையின் மிக உயரமான நீர் வீழ்ச்சி எது?
வளவை கங்கையில் அமைந்துள்ள பம்பரகந்தை நீர் வீழ்ச்சியாகும். இதன் உயரம் 240 m



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87) சிங்கராசா காடு எங்குள்ளது?
சப்பிரகமுவா மாகாணத்தில்

88) இலங்கையில் அதிக மழையைப் பெறும் இடம் எது
வட்டவளை 500 cm

89) இலங்கையில் மிகக் குறைந்த மழையைப் பெறும் இடம் எது?
மறிச்சுக்கட்டி (70cm)

90) யாழ்ப்பாணத்தில் பாய்கின்ற ஆற்றின் பெயர் என்ன?
வழுக்கையாறு

91) இலங்கையின் பண்பாட்டு முக்கோணம் எந்த வரலாற்று நகர்களை இணைக்கின்றது?
அனுராதபுரம், பொலநறுவை, கண்டி

92) இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பின் உயர் நீதிமன்றத்தின் பொது நியாயாதிக்கங்கள் எவை?

1) குடியரசின் அரசியல் அமைப்பு கருமங்கள் தொடர்பான நியாயாதிக்கம்

2) அடிப்படை உரிமைகளை பாதுகாத்தலுக்கான நியாயாதிக்கம்.

3) மேல் முறையீட்டுக்கான இறுதி நியாயாதிக்கம்

4) ஆலோசனை நியாயாதிக்கம்

5) தேர்தல் ஆட்சேபனை மனு வழக்குகளாலான நியாயாதிக்கம்

6) பாராளுமன்றத்தின் சிறப்பு உரிமைகள் மீறப்படுதல் தொடர்பிலான நியாயாதிக்கம்.

7) சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் உரித்தாகும் அல்லது ஆணையிட்டளிக்கும் அத்தகைய வேறு கருமங்கள் தொடர்பிலான நியாயாதிக்கம்

93) இலங்கையின் அரசியல் அமைப்பின் ஜனாதிபதியின் பங்கு எவ்வாறு அமைந்துள்ளது?
இலங்கை சுதந்திரம் பெற்ற பின் 1972ஆம், 1978ஆம் ஆண்டுகளில் இலங்கையின் அரசியல் அமைப்பு முறை முழுதாக மாற்றியமைக்கப்பட்டது. ஆட்சித்துறையின் தலைவர் என்ற ரீதியில் இலங்கையின் நிர்வாகத்துறை அதிகாரங்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புகளும் ஜனாதிபதியையே சார்ந்துள்ளது. ஜனாதிபதி அமைச்சரவையில் ஓர் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அமைச்சரவையின் தலைவராக இருத்தலும் வேண்டும். அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை கலைக்கப்பட்டாலும் ஜனாதிபதி தொடர்ந்தும் பதவி வகித்தல் வேண்டும். அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள்ளும் அதிகாரத்தினையும் ஜனாதிபதியே பெற்றுள்ளார் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட தினத்தில் இருந்து அடுத்த பொது

தேர்தல் வரை நடைமுறையில் உள்ள அமைச்சரவையை ஜனாதிபதி விரும்பினால் வைத்திருக்க முடியும் அதே நேரம் முழுஅமைச்சுக்களையும் அவரால் வகிக்கவும் முடியும் இலங்கை வரலாற்றில் தற்போது உள்ள நிறைவேற்று அதிகாரம்மிக்க ஜனாதிபதியின் அதிகாரம் மிகையானது.

94) புராதன இலங்கையின் கிராம சபைகள் எவ்வாறு அழைக்கப் பட்டன? கம்சபா

95) விதானை முறைக்குப் பதிலான கிராமசேவகர் முறை எப்போது உருவாக்கப்பட்டது?
1963 மே 1ம் திகதி

96) இலங்கை சிவில் நிர்வாக சபைக்குப் பதிலாக ஸ்ரீலங்கா நிர்வாக சேவை எப்போது உருவாக்கப்பட்டது?
1973 மே 1ம் திகதி

97) G. S. T. என்றால் என்ன?
Good Service Tax (பொருட்கள் சேவைகள் வரி)

98) G. S.T எத்திணைக்களத்தால் அமுலாக்கப்படுகிறது?
உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால்

99) இலங்கையின் மொத்த சனத்தொகை யாது?
சுமார் 1 கோடி 87 இலட்சம்.

100) இலங்கையில் சனத்தொகை அதிகமாக உள்ள 03 மாவட்டங் களைக் குறிப்பிடுக?
கொழும்பு மாவட்டம், கம்பகா மாவட்டம். குருநாகல மாவட்டம்.

101) இலங்கையில் உள்ள அரசாங்கப்பாடசாலைகளின் எண் ணிக்கை எவ்வளவு?
10650



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

102) இலங்கையில் பொலிஸ் திணைக்களம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

1866 செப்டம்பர் 03ம் திகதி

103) இலங்கையின் "தொழிற்சங்கத்தந்தை" என அழைக்கப்பட்டவர் யார்?

ஏ. ஈ. குணசிங்க

104) இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது அரசியல் கட்சி எது?

தேசிய காங்கிரஸ்

105) இலங்கையில் தற்போதைய பாராளுமன்ற சட்டதிட்டங்கள் எந்த நாட்டை தழுவியது?

அமெரிக்கா, பிரான்சு.

## இலங்கையின் பிரதான தொழிற்சாலைகளும் ஆராய்ச்சி நிலையங்களும்

106) பிறிமா ஆலை - திருகோணமலை

107) இல்மனைற் தொழிற்சாலை - புல்மோட்டை

108) உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் - ரங்கல

109) தேயிலை ஆராய்ச்சி நிலையம் - தலவாக்கொல்ல

110) இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - அகலவத்தை

111) தெங்குப்பொருள் ஆராய்ச்சி நிலையம் - வென்னப்புல, லுனுவில

112) கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி - அங்குலானை

113) கமத்தொழில் ஆராய்ச்சி நிலையம் - குண்டகசாலை, மகாஇலுப்பள்ளம

114) கரும்பு ஆராய்ச்சி நிலையம் - அங்குன, பலஸ்ஸ

115) அவரை (சோயாஅவரை) ஆராய்ச்சி நிலையம் - பல்லேகல

116) நெல் ஆராய்ச்சி நிலையம் - பந்தலகொட, கண்னொறுப, கிங்கராக்கொடை, மகாஇலுப்பள்ளம

117) அரிசி உற்பத்தி ஆய்வு நிலையம் - அனுராதபுரம்.

118) இரசாயன உற்பத்தித் தொழிற்சாலை - பரந்தன்

119) பெற்றோலிய எண்ணை சுத்திகரிப்பு நிலையம் - சப்புகஸ்கந்த

120) சீமெந்து தொழிற்சாலை - காலி, புத்தளம், காங்கேசன்துறை

121) மட்பாண்டத் தொழிற்சாலை - பிலியந்தல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122) இரும்புருக்குத் தொழிற்சாலை - உருவெல
123) டயர் ரீயூப் தொழிற்சாலை - களனி
124) காகித தொழிற்சாலை - வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டியா
125) உலோக ஆலை - யக்கலை
126) புடவை ஆலை - வெயாங்கொடை, பூங்கொடை, துல்கிரிய
127) கட்டிப்பால் தொழிற்சாலை - பொலநறுவை
128) பால்பதனிடும் தொழிற்சாலை - அம்பேகல
129) கனிப்பொருள் ஆராய்ச்சி நிலையம் - புல்மோட்டை
130) சீனித்தொழிற்சாலை - கந்தளாய், பெல்வத்தை
131) புகையிரத தொழிற்சாலை - இரத்மலான

## பிரதான வைத்தியசாலைகளும், ஆராய்ச்சி நிலையங்களும்

132) புற்றுநோய் வைத்தியசாலை - மகரகம
133) தொழுநோய் வைத்தியசாலை - மாந்தீவு
134) ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையம் - நாவின்ன
135) மேல்நாட்டு ஆராய்ச்சி நிலையம் - கொழும்பு
136) காசநோய் ஆஸ்பத்திரி - காங்கேசன்துறை, வெலிசறை

## குறிப்பிடத்தக்க நிலையங்கள்

137) உல்லாசப் பிரயாணிகளின் வருகை - கிக்கடுவ
138) பறவைகள் சரணாலயம் - குமணைக்காடு
135) நன்னீர்க்குளம் - கீரிமலை
136) நிலையான ஊற்று - நிலாவரை
137) மிருகங்களின் சரணாலயம் - வில்பத்துக்காடு, யால
138) சுதந்திர வர்த்தக வலயம் - கட்டுநாயக்கா

## இலங்கை நீதித்துறையின் சிறப்புச் செய்திகள்

139) பிரிவிடல் (Partition) விடயமாக எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்?
மாவட்ட நீதிமன்றம்

140) வழியுரிமை சொத்து நம்பிக்கை பொறுப்பு விடயங்களில் எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்?
மாவட்ட நீதிமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

141) ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் சம்பந்தமாக எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்?

உயர்நீதிமன்றம்.

142) பராமரிப்பு சம்பந்தமாக எந்த நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய வேண்டும்?

நீதவான் நீதிமன்றம்.

143) நியாமற்ற வேலை நீக்கம் சம்பந்தமாக எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்?

தொழில் நியாயமன்று

144) பாராளுமன்ற சிறப்புரிமை மீறல் அரசியல் அமைப்பு பொருள் கோடல் சம்பந்தமாக எந்தநீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்?

உயர்நீதி மன்றம்

145) ஆட்கொலை, கற்பழிப்பு சம்பந்தமாக எந்த நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய வேண்டும்?

மேல் நீதிமன்றம்

146) வருமானவரி சம்பந்தமான வழக்குகளை எந்த நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்ய முடியும்?

மாவட்டநீதி மன்றம், நீதவான் நீதிமன்றம்

147) நீதிச்சேவை ஆணைக்குழுவின் பொறுப்பான கடமைகள் எவை?

கீழ்நீதிமன்றங்களின் ஒழுங்காற்று நடவடிக்கை, நீதிபதிகள் நியமன நீதிபதிகள் பதவி விலகல்.

148) மேல்முறையீடு செய்யக்கூடிய நீதிமன்றங்கள் எவை?

உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம்

149) நீதித்துறை சட்டம் 1978 இன் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்றம் எவை?

ஆரம்பநீதிமன்றம், நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மேல்நீதிமன்றம்.

150) 1987ம் ஆண்டு 13வது திருத்தப்படி ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்றம் எது?

மகாண மேல் நீதிமன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தை மிகு பறவைகள்

❖ இலங்கையில் 482 பறவை இனங்கள் காணப்படுகின்றன இவற்றுள் 66 இனங்கள் இலங்கைக்கே உரித்தானவை. உலகில் எல்லாமாக 9000 இற்கு மேற்பட்ட பறவையினங்கள் காணப்படு கின்றன.

❖ தீக்கோழி, எமு கசோவாரி, கிவி, றீ (Rhea) என்பன பறக்க முடியாத பறவைகளாகும்.

❖ மிகப்பெரிய பறவை தீக்கோழி ஆகும். உயரம் 2.4.m, நிறை 150kg. நடக்கும் வேகம் 65km/h

❖ மிகச் சிறிய பறவை பாடும் சிட்டு (Humming bird) ஆகும். நீளம் 57mm - நிறை 1.6g

❖ கசோவாரி பறவையே மிகவும் பயங்கரமான பறவையாகும் அவுஸ்திரேலியா, நியூகினியா ஆகிய நாடுகளில் வாழும் இப்பறவை தனது காலினால் உதைத்து மனிதனைக் கொல்லக் கூடியது.

❖ பறக்கும் பறவைகளில் நாரையே மிகவும் உயரமான பறவையாகும். 1.5m உயரம். இலங்கையில் பூநாரை (Flamingo) காணப்படு கின்றது.

❖ பறக்கும் பறவைகளில் பஸ்ராட் (Bustard) பறவையே மிகவும் நிறை கூடியது (18kg)

❖ அல்பற்றோஸ் (Albatross) பறவையே மிகவும் நீளமான செட்டைகளைக் கொண்டுள்ளது. நுனிக்கு நுனி நிளம் 3.4m

❖ சிப்பி பிடிப்பான் என்னும் பறவை சிப்பிகளை உடைப்பதற்காக உயரத்தில் இருந்து பாறையின் மீது விழவிட்டு உடைக்கின்றது.

❖ நீர்க்காகம் போன்று நீர்ப்பறவைகள் நீரினுள் மூழ்கி தமது இரைகளைப் பிடிக்கின்றன.

❖ கூழைக்கடா (Pelican) தனது கீழ்த்தாடையில் உள்ள பெரிய சவ்வுப் பையினுள் பெரிய மீன்களைக் கூட பிடித்து வைத்திருந்து விழுங்கும்.

❖ நியூகினியாவில் வாழும் றக்கியானா (Ragginaa) என்னும் அலங்காரப் பறவை மிகவும் அழகானது. பல வண்ண இறகுகளைக் கொண்டுள்ளது. ஆண் பறவை இறகுகளை விரித்து அழகாக ஆடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கழுகு, வல்லூறு, பருந்து, ஆந்தை என்பன ஊனுண்ணிகளாகும்.
  கழுகு, வல்லூறு, பருந்து என்பன ஆகாயத்தில் வட்டமிடும் போதே தரையில் திரியும் எலி போன்ற சிறிய விலங்குகளைப் பார்க்கக் கூடிய அளவு கூர்மையான பார்வை கொண்டவை.
- புறா, கிளி, லவ்பேர்ட் என்பன தாவர உண்ணிகளாகும்
- பல பறவைகள் அழகிய கூடுகளைக் கட்டுகின்றன.
- ஆண் தூர்க்கணாங்குருவி ஒரு பருவத்தில் பல கூடுகளைக் கட்டி பல பெண் பறவைகளுக்கு வழங்குகின்றது.
- தையற்காரக்குருவி இலைகளைத் தைத்து கூடு அமைகின்றது.
- இரட்டைச் சொண்டுக்குருவி மரப்பொந்தில் கூட்டை அமைக்கின்றது.
  பெண் பறவை பொந்தினுள் சென்றதும் ஆண்பறவை பொந்தின் வாயிலை களிமண் கொண்டு அடைக்கும். சிறிய துவாரம் வழியாக பெண் பறவைக்கு ஆண்பறவை உணவு ஊட்டும். குஞ்சுகள் பொரித்து வளர்ந்ததும் களிமண் வாயிலை உடைத்து தாயும் குஞ்சுகளும் வெளிவரும்.
- தீக்கோழியின் முட்டையே மிகவும் பெரியது (1.5 kg நிறை)
- ஹம்பிங்கேட் (Beeumming bird) இன் முட்டை 6.35 mm நீளம் 0.35g நிறை.
- கல்போனியா கொண்டோர் (California condor) என்னும் பறவை இரண்டு வருடத்திற்கு ஒரு முறை மட்டும் ஒரு முட்டை இடும்.
- 11cm நீளமுள்ள சிறிய நீலச்சீட்டு (little blue tit) ஒரு பருவத்தில் 15 முட்டைகளை இடுகிறது.
- கோழி போன்ற பறவைகளின் முட்டை முட்டையுருவ வடிவமாக இரு முனைகளிலும் குவிந்த வடிவத்தில் காணப்படும். பறவையின் காலினால் முட்டை தட்டுப்பட்டாலும் அது உருண்டு தொலைதூரம் போகாது.
- மரப்பொந்துகளில் முட்டை இடும் ஆந்தை போன்ற பறவைகளின் முட்டைகள் கோள வடிவமானவை.
- அவுஸ்திரேலியாவில் வாழும் மாலிகோழி (Mallee fowl) மண்ணால் கட்டப்பட்ட கூட்டினுள் முட்டையிடும். கூட்டினுள் வைக்கப்பட்ட இலைகள் உக்கும் போது வெளிவிடப்படும் வெப்பத்தினால் கூட்டின் வெப்பநிலை 33°C வெப்பநிலையில் பேணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பநிலை கூடும் போது அழுகும் இலைகளை அகற்றியும், வெப்பநிலை குறையும் போது மேலதிக இலைகளைப் போட்டும் ஆண்பறவை முட்டைகளை மாறா வெப்பநிலையில் அடைகாக் கின்றது.

❖ உழவாரன் இனத்தின் ஒருபறவை அமைக்கும் கூட்டினை ஆபிரிக்க நாட்டினர் எடுத்துச் சூப் தயாரித்து அருந்துகின்றனர். (Swift)

❖ தேன்சிட்டுக்கள் உலங்கு வானூர்தி போன்று ஆகாயத்தில் அசையாமல் ஒரு இடத்தில் நிற்கக் கூடியவை. இவை செட்டைகளை மிகவும் விரைவாக அடிக்கின்றன.

❖ பென்குயின் புவியின் தென்துருவப் பகுதியில் (அந்தாட்டிக்கா) வாழ்கின்றன. இவற்றில் 18 இனங்கள் உண்டு மிகவும் பெரிய பென்குயின் எம்பர் பென்குயின் (Emperor Penguin) ஆகும். இவற்றின் இறகுகள் மிகச்சிறயவை. செதில்கள் போலக் காணப் படும். உடலை நன்கு முடிக் கொள்வதால் குளிரைத் தாங்கக் கூடியது. பென்குயின்களின் முன் அவயவம் (செட்டை) துடுப்பு போல் உள்ளது. கால்விரல்களுக்கிடையில் மென் சவ்வு காணப்படும். இதனால் இவை மிகவும் விரைவாக நீந்தக் கூடியவை. நீரின் கீழ் சுழியோடவும் கூடியவை.

❖ பென்குயின்கள் ஒன்று அல்லது இரண்டு முட்டையே இடும். ஆண், பெண் பறவைகள் மாறிமாறி அடைகாக்கும். அடைகாக்கும் காலம் 33-64 நாள்கள் வரை வேறுபடும். ஆண்பறவை ஒரு கிழமையும் பெண்பறவை மற்றக் கிழமையும் அடைகாக்கும் சூழல் வெப்பநிலை (66°C) அடைவதால் முட்டையை கவனமாக கால்களுக்கிடையில் வைத்து உடலால் மூடி அடைக்காக்கும் அக் காலத்தில் உணவு உட்கொள்வதில்லை. எம்பரர் பென்குயின் களில் ஆண்பறவையே 64 நாட்கள் உணவின்றி அடைகாக்கும். 64நாட்களின் பின் அப்பறவை மிகவும் மெலிந்து காணப்படும்.

❖ பறவைகள் காலநிலை மாற்றத்திற்கேற்ப குடிபெயருகின்றன. அவை ஆயிரக்கணக்கான km தொலைவிற்கு சென்று முட்டை யிட்டு குஞ்சுகள் பொரித்து வளர்ந்ததும் மீண்டும் தமது இடத்திற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்புகின்றன. இவை தமது பாதையை புவியின் காந்தசக்தி, நட்சத்திரக்கோலம், தரையின் தோற்றம் என்பவற்றைக் கொண்டு இனம் கண்டு கொள்கின்றன.

- ஒஸ்பிறே (Osprey) என்னும் மீன் உண்ணும் பறவை 10,000 km பறந்து குடிபெயருகின்றது.
- எல்லாப் பறவைகளிலும் பார்க்க ஆக்ரிக் ஆலா (Arcticterm) பறவையே வடதுருவத்தில் (Arctic) கூடு அமைந்து முட்டையிடும். 20000 km தூரம் பறந்து தென்துருவத்திற்கு (Antarctic) பறந்து சென்று கோடையைக் கழித்தபின் மீண்டும் வடதுருவத்திற்குத் திரும்புகின்றது.
- பல பறவைகள் மரக்கிளையில் இருக்கும் போதும் வானத்தில் பறக்கும் போதும் பாடுகின்றன. வானம்பாடி மிக அழகாகப் பாடுகிறது.
- மொக்கிங் பறவை (Mocking) bird) தனக்கே உரித்தான பாடலைப்பாடும். அதே வேளையில் இது மற்றப் பறவை களினதும் மோட்டர் வண்டியின் ஒலிப்பான், ஊதுகுழல்கள் (Siron). நாயின் குரைப்பு என்பவற்றைப் போன்றும் ஒலிக்கும் ஆற்றல் கொண்டுள்ளது.
- சதுப்பு நில கதிர்க்குருவி (Marsh Warbler) 70 வகையான பறவைகளின் பாடலைப் போன்று போலச் செய்யக்கூடியது.

# பொது அறிவு

**இலங்கையில்:**

1950 ஆம் ஆண்டு வாளேந்திய சிங்கம் தேசியக் கொடியாக்கப்பட்டது

| | |
|---|---|
| தேசிய கீதத்தை இயற்றியவர் | - ஆனந்த சமரக்கோன் |
| தேசிய மரம் | - நாகமரம் |
| தேசிய மலர் | - நீலோற்பலம் |
| தேசியபறவை | - காட்டுக்கோழி |
| தேசியவிளையாட்டு | - கரப்பந்தாட்டம் |
| தேசியபுனிதமரம் | - வெள்ளரசுமரம் |
| முதல் ஜனாதிபதி | - வில்லியம் கோபல்லாவ |
| முதல் தேசாதிபதி | - சேர் ஒலிவர் குணதிலக |
| முதல் அரசி | - அனுலா |
| முதலாவது செய்தித்தாள் | - கொழும்பு ஜேணல் |
| முதற்பிரதமர் | - D.S. சேனநாயக்கா |
| முக்கியத்துவம் வாய்ந்த தூபி | - தூபராமதாது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பெண் பிரதமர் – ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா
முதலாவது அஞ்சல் முத்திரை – 1857 ஆம் ஆண்டு வெளியானது
முதலாவது பெண்கள் பாடசாலை – உடுவில் மகளிர் கல்லூரி
முதலாவது தமிழ் பேராசிரியர் – சுவாமி விபுலானந்தர்
குறுகிய காலம் பதவி வகித்த பிரதமர் – W. தஹநாயக்கா
நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதல் ஜனாதிபதி – J.R. ஜெயவர்த்தன
முதலாவது அஞ்சல் அலுவலகம் – 1895 இல் கொழும்பில் திறந்து வைக்கப்பட்டது
முதலாவது சுதந்திர வர்த்தக வலயம் – கட்டுநாயக்காவில் 1978 இல அமைக்கப்பட்டது.
முதல் பெண் மாகாண முதலமைச்சர் – சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க
தமிழ் மொழியில் வெளியான முதல் நாளிதழ் – உதயதாரகை

| | | |
|---|---|---|
| ஜனாதிபதியின் வாசல்தலம் | - | ஜனாதிபதி மாளிகை |
| பிரதமரின் வாசல்தலம் | - | அலரிமாளிகை |
| சபாநாயகரின் வாசல்தலம் | - | மும்தாஜ்மகால் |
| புகழ்பூத்த ஓவியம் | - | சிகிரியா ஓவியம் |
| இலவசக்கல்வி ஆரம்பித்த ஆண்டு | - | 1945 |
| இலவசக்கல்வியின் பிதாமகர் | - | C. W. கன்னங்கரா |
| குறுகியகாலம் ஜனாதிபதியாக இருந்தவர் | - | D. B. விஜயதுங்கா |
| கூடுதலான மாவட்டம் உள்ள மாகாணம் | - | வடமாகாணம் |
| மாவட்டங்களின் எண்ணிக்கை | - | 25 |
| இலங்கை குடியரசானது | - | 22.05.1972 |
| முதல் பெண் துணைவேந்தர் | - | சாவித்திரி குணசேகர (சட்டத்துறைப் பேராசிரியர் கொழும்பு பல்கலைக்கழகம்) |
| மிக உயரமான மலை | - | பீதுருதாலகாலமலை |
| மிகப்பழைய விமான நிலையம் | - | இரத்மலானை |
| தேசிய அடையாள அட்டை வழங்க ஆரம்பிக்கப்பட்டது | - | 1972 ஆம் ஆண்டு |
| தனிச்சிங்களம் சட்டமாக்கப்பட்டது | - | 05.06.1956 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவம் உருவாக்கப்பட்ட ஆண்டு - 1949

விமானப்படை அமைக்கப்பட்ட ஆண்டு - 1958

இலங்கை வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1939

மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1961

தேசிய சேமிப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1972

## உலகில்...

| | | |
|---|---|---|
| மிகப்பெரிய ஜனநாயக நாடு | - | இந்தியா |
| மிகப்பெரிய கம்யூனிசநாடு | - | சீனா |
| மிகப்பெரிய இஸ்லாமியநாடு | - | இந்தோனேசியா |
| மிகப்பெரிய கண்டம் | - | ஆசியா |
| மிகப்பெரிய சமுத்திரம் | - | பசுபிக் சமுத்திரம் |
| மிகப்பெரிய தீவு | - | கிறின்லாந்து |
| மிகப்பெரிய மலை | - | இமயமலை |
| மிகப்பெரிய மலைத்தொடர் | - | அன்றீஸ் |
| மிக உயரமான மலைச்சிகரம் | - | எவறெஸ்ற் |
| மிக நீளமான நதி | - | நைல்நதி |
| மிகப்பெரிய பாலைவனம் | - | சகாரா |
| மிகப்பெரிய நதி | - | அமேசன் நதி |
| மிகப்பெரிய நூலகம் | - | லெனின் தேசிய நூலகம் |
| மிகப் பெரிய நாடு | - | ரஷ்யா |
| மிகப்பெரிய கூடுகட்டும் பறவை | - | வழுக்கைத்தலைக் கழுகு |
| மிக உயரமான பறவை | - | தீக்கோழி |
| மிகப்பெரிய நூதனசாலை | - | பிரிட்டிஸ் நூதனசாலை |
| மிக அதிகமான எரிமலைகள் உள்ள நாடு | - | இந்தோனேசியா |
| மிகப்பெரிய சிலை | - | நியூயோக் சுதந்திர சிலை |
| மிகப் பெருஞ்சுவர் | - | சீனப்பெருஞ்சுவர் |
| மிகப்பெரிய நீண்ட ரயில் மேடை | - | சோன்பூர் இந்தியா |
| மிகப்பெரிய விமான நிலையம் | - | சவுதி அரேபியாவில் உள்ள கிங்காலித் |
| மிக உயர்ந்த கோபுரம் | - | கனடாவில் உள்ள C.N. கோபுரம் |
| மிகப்பெரிய மணி | - | மாஸ்கோவில் உள்ள கிரேட் |
| ஒரேயொரு இந்துமத நாடு | - | நேபாளம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகை கூடிய நாடு - சீனா
சனத்தொகை குறைந்த நாடு - வத்திக்கான்
பெண்களுக்கு கட்டாய இராணுவ
பயிற்சி வழங்கும் நாடு - இஸ்ரேல்
அதிக மக்கள் பேசும் மொழி - சீனமொழி
முதல் பெண் பிரதமர் - ஸ்ரீமாவோபண்டாரநாயக்கா
முதல் பெண் தாதி - புளோரன்ஸ் நைட்டிங்கேல்
மிகச்சிறிய கூடுகட்டும் பறவை - ஹம்மிங்சிட்டு
மிகப்பழமையான விளையாட்டு - போலோ (Polo)
அதிகளவு தேயிலை உற்பத்தி செய்யும் நாடு - இந்தியா
அதிகளவு தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடு - இலங்கை

## இப்படிச் சில பெயர்கள்

| | | |
|---|---|---|
| இந்து சமத்திரத்தின் முத்து | - | இலங்கை |
| இருண்ட கண்டம் | - | ஆபிரிக்கா |
| இடி மின்னல் நாடு | - | பூட்டான் |
| இந்தியாவின் நறுமணத் தோட்டம் | - | கேரளம் |
| அரண்மனை நகரம் | - | கொரியா |
| அதிகாலை அமைதி நாடு | - | உரோமாபுரி |
| ஆயிரம் வாவி நாடு | - | பின்லாந்து |
| உலகின் கூரை | - | திபெத் |
| உலகின் சீனிக்கிண்ணம் | - | கியூபா |
| ஐரோப்பாவின் நோயாளி | - | துருக்கி |
| ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | - | சுவிற்சலாந்து |
| ஐரோப்பாவின் போர்க்களம் | - | பெல்ஜியம் |
| எகிப்தின் கொடை | - | யப்பான் |
| சூரியன் மறையும் நாடு | - | இங்கிலாந்து |
| நள்ளிரவு சூரிய நாடு | - | நோர்வே |
| புயலடிக்கும் நகரம் | - | பலஸ்தீனம் |
| சீனாவின் துயரம் | - | குவாங்கோநதி |
| மரகதத்தீவு | - | அயர்லாந்து |
| தடுக்கப்பட்ட நகரம் | - | லாசா, தீபெத் |
| தங்கப் போர்வை நாடு | - | அவுஸ்திரேலியா |
| பொற்கோவில் நகரம் | - | அமிர் தசரஸ் |
| ஏழுகுன்று நகரம் | - | ரோம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 1943 | 2010 |
| 05 | 01 |
| 14 | 26 |

பாலவி கிழக்கு, வயாவிளானை பிறப்பிடமாகவும்,
அச்சுவேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## பொன்னுத்துரை சின்னத்தங்கம்

குடும்பத்தின் குலவிளக்காய்
அறநெறி தவறாது வாழ்ந்து
அதன் இலக்கண நாயகியாக
மனித நேயப் பண்புகளை உணர்த்தி
அன்போடும் பாசத்தோடும்
நல்வழிப்படுத்திய உத்தமியே?
உன்னைக் கண்கெட்ட காலனவன்
கருணை இன்றி எடுத்தானோ?
அன்பான பிள்ளைகள் உறவினர்களை
அவனியிலே தவிக்க விட்டு
அவதியாய் போனதேனம்மா?

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்தியடையும்
வண்ணம் இறைவனை பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உன்பிரிவால் துயருறும்.
யசிகரனின் ( தாரகன்)
நண்பர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்



*வெங்கொடுமைச் சாக் காட்டில் வெந்து துயர்படவே*
*தங்க மனதொடு ஒடி வந்து உதவி செய்த*
*அன்பர், நண்பர், ஆர்வலர் உறவினர்கட்கு*
*சிந்தை கனிந்து செப்புகிறோம் நன்றியினை.*

எமது குடும்பத் தலைவி பொன்னுத்துரை சின்னத்தங்கம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஓடி வந்து எமக்கு வேண்டிய உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர், அன்பர், ஆதரவாளர்களுக்கும், தொலை பேசியில் அனுதாபச் செய்தி கூறியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும் எமது இதயங் கனிந்த நன்றியினைத் தெரிவிப்பதோடு, இன்றைய ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் பங்கு கொண்டு சிறப்பித்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் இம்மலரினை அழகுற அமைத்துத் தந்த ஷாம்பவி பதிப்பகத்தினருக்கும் எமது குடும்பத்தினரின் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.


**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**
**25.02.2010**



**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வம்சாவழி




( ✷ இக் குறியீடு அமரர்களைக் குறிக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org